இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 02-08-2023

# மீனவர்களை கண்ணீரில் மிதக்கவிடும் பா.ஜ.க.!

**திடீரென தமிழ்நாட்டு மீனவர்கள் மீது பாசம் பொங்கி இருக்கிறது உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு. 'பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபிறகு தமிழ்நாடு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லையா?' என்ற கிடுக்குப் பிடி கேள்வியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பி இருக்கிறார்கள். எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் - அதாவது காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நரேந்திரமோடி அவர்கள் ராமநாதபுரம் பொதுக்கூட்டத்தில் பேசியதை எடுத்துக் காட்டி இருக்கிறார் முதலமைச்சர்.**

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர் கூட உயிரிழக்க மாட்டார். தமிழ்நாட்டு மீனவர்க்கு இலங்கையால் பிரச்சினை. குஜராத் மீனவர்க்கு பாகிஸ்தானால் பிரச்சினை. இரண்டு மாநில மீனவர்களையும் இணைத்து பேசி கூட்டு நடவடிக்கை எடுப்போம்" என்று சொன்னார் நரேந்திர மோடி அவர்கள். 2014 முதல் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது சிங்களக் கடற்படை தாக்குதல் நடத்தவில்லையா? இதுதான் உள்துறை அமைச்சர் பதில் சொல்ல வேண்டிய கேள்வி ஆகும்.

**2015 - தாக்குதல்**

**2016 - தாக்குதல்**

**2017- தங்கச்சிமடம் மீனவர் பிரிட்டோ கொலை செய்யப்பட்டார்.**

**2018 டிசம்பர் - மீனவர்கள் மீது பெட்ரோல் குண்டு வீசித் தாக்குதல் - படகுகள் சேதம்**

**2020 அக்டோபர் - இலங்கைக் கடற்படை, மீனவர்களை தாக்கியது. 28 மீனவர்கள் கைது செய்யப்பட்டார்கள். மீனவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்த வீடியோ வெளியானது.**

**2021 ஜனவரி - மேசியா நாகராஜன், செந்தில்குமார், சாம்சன், டார்வின் ஆகிய நான்கு மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.**

**மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியைச் சேர்ந்த 6 மீனவர்கள் கடந்த 21.02.2023 அன்று தரங்கம்பாடி மீனவ கிராமத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றார்கள். அவர்கள் தாக்கப்பட்டார்கள்.**

**கடந்த 25 ஆம் தேதி இராமநாதபுரம் மீனவர்கள் 9 பேர் நெடுந்தீவு பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதெல்லாம் உள்துறை அமைச்சருக்குத் தெரியுமா தெரியாதா?**

கடந்த மார்ச் மாதம் மூன்று நாள் பயணமாக இலங்கைக்குச் சென்றார் பா.ஜ.க.வின் ஒன்றிய அமைச்சர் எல்.முருகன். இலங்கைத் தமிழர் பிரச்சினையையே தீர்த்து விட்டதைப் போலவும் - இனி தமிழ்நாட்டு மீனவர் ஒருவரைக் கூட இலங்கைக் கடற்படை எதுவும் செய்யாது என்றும் ஏதோ இலங்கை அதிபரைப் போல முருகன் பேட்டி கொடுத்தார். அவர் பேட்டி கொடுத்த இரண்டு வாரத்துக்குள் தமிழ்நாட்டு மீனவர்களைக் கைது செய்துவிட்டது இலங்கை.

கடந்த பிப்ரவரி 9 ஆம் தேதி இலங்கை செல்வதற்கு முன்னால் ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், "இலங்கை பயணத்தின் போது தமிழ்நாடு மீனவர்களின் படகுகள் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்படுவது உள்ளிட்ட பிரச்சினை குறித்து இலங்கை அரசு அதிகாரிகளிடம் பேச உள்ளோம்" என்று சொன்னார். இலங்கைப் பயணம் சென்று விட்டு கடந்த பிப்ரவரி 13 ஆம் தேதி சென்னை விமான நிலையம் வந்து இறங்கிய ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், "சர்வதேச கடல் எல்லையில் தமிழ்நாடு மீனவர்களின் பிரச்சினை குறித்து பேசப்பட்டது. இலங்கை சிறைகளில் நேற்று வரை, ஒரு இந்திய மீனவர்கூட இல்லை" என்று சொன்னார். பிப்ரவரி 23 ஆம் தேதி தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மீனவர்கள் தாக்கப்பட்டார்கள்.

**இது தொடர்பாக ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவசர கடிதம் ஒன்றை அனுப்பினார். "இந்தத் தாக்குதல், அனைத்து சர்வதேச விதிமுறைகள் மற்றும் மரபுகளை அப்பட்டமாக மீறுவதாகவும், பாக். வளைகுடா பகுதியில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை இலங்கைக் கடற்படை தொடர்ந்து மீறி வருவதுடன், நமது மீனவர்களுக்கு கடுமையான காயங்களையும், பொருளாதார இழப்புகளையும் அடிக்கடி ஏற்படுத்துவதையும்" சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், "இலங்கை கடற்படையினரின் இத்தகைய வன்முறைச் செயல்கள் அதிர்ச்சியளிப்பதுடன், கண்டனத்திற்குரியது" என்றும் தெரிவித்தார்.**

பா.ஜ.க.வின் நாடகம் அம்பலம் ஆனதும், "தமிழ்நாடு மீனவர்களை மீட்க விரைவில் இந்திய இலங்கைத் துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடக்கும்" என்று சொன்னார் முருகன். இவர்கள் இலங்கை சென்று விட்டு வந்த ஒரே வாரத்தில் தாக்கி கைது செய்கிறார்கள் என்றால் மோடி அரசைப் பார்த்து இலங்கை அரசுக்கு எந்த பயமும் இல்லை என்றுதானே அர்த்தம்.

2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் நாள் இந்திய - இலங்கை அமைச்சர்களுக்கு இடையே மீனவர்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்ததே! அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது? முறையான, அக்கறையான முடிவை எடுத்திருந்தால் தொடர்ச்சியாக இத்தனை தாக்குதலை எதிர்கொண்டிருக்க மாட்டார்களே மீனவர்கள்?

2021 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் நரேந்திரமோடி அவர்கள், "நமது மீனவர்கள் நீண்ட காலப் பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறார்கள். அவர்களது உரிமைகளை எனது அரசு எப்போதும் பாதுகாக்கும் என்று உறுதி அளிக்கிறேன். இலங்கையில் மீனவர்கள் சிறைப்பிடிக்கப்படும் போது எல்லாம் அவர்களை விரைவாக விடுதலை செய்வதை நாங்கள் உறுதிப்படுத்தி உள்ளோம்" என்றார். 'எனது ஆட்சியில் கைது நடக்காது என்று சொல்லவில்லை, கைது செய்தால் விரைவில் விடுவித்து விடுவாராம்" இதுதான் பா.ஜ.க.வின் சாதனையா?

**மீனவர்களை விரட்டுதல், வலைகளை அறுத்தல், படகுகளை தாக்குவது, துப்பாக்கியால் சுடுவது, கைது செய்வது, சிறையில் அடைப்பது, படகுகளை பறிப்பது என்று இலங்கைக் கடற்படையின் அராஜகங்களுக்கு அளவில்லாமல் போய்விட்டது. அதை தட்டிக் கேட்கும் அரசாக பா.ஜ.க. அரசு இல்லை என்பது தான் உண்மை.**

**"இந்தியாவில் ஆண்மையுள்ள பிரதமர் இல்லை, அதனால் தான் அண்டை நாடுகள் நம்மை சீண்டிப் பார்க்கின்றன" என்று அன்று மன்மோகன்சிங்கை குறை சொன்னவர்தான் மோடி.**

**இன்று அவரை என்னவென்று சொல்வது?**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் வரவு செலவு திட்ட அறிக்கைகளில் 20,000 திறன் வகுப்பறைகள் ரூ.400 கோடி செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பின்படி, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ரூ.6.86 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 303 திறன் வகுப்பறைகளை (Smart Class Rooms) காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் ஜி.அறிவொளி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப. கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இராதாபுரம் தொகுதியில் 303 திறன் வகுப்பறைகள் திறப்பு!

# 61 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.2-

இராதாபுரம் தொகுதியில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ரூ.6.86 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 303 திறன் வகுப்பறைகளை திறந்து வைத்து, கருணை அடிப்படையில் 61 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2023) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ரூ. 6.86 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 303 திறன் வகுப்பறைகளை (Smart Class Rooms) காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், பள்ளிக் கல்வித் துறையில் பணி புரிந்து பணிக்காலத்தில் உயி ரிழந்த 61 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 4 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதிகளை, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட இல்லம் தேடி கல்வி, நம் பள்ளி நம் பெருமை, எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்பு திட்டங்கள், பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள், மின்சாதன வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், திறன் வகுப்பறைகள் அமைத்தல், காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**இராதாபுரம் பகுதியில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள திறன் வகுப்பறைகளை திறந்து வைத்தல்!**

தற்போதைய தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ற வகையில் மாணவர்களைத் தயார்படுத்துதல் அவசியம் ஆகும். தொழில்நுட்ப உள்கட்டமைப்பை வழங்குவதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ள தமிழ்நாடு அரசு, மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்குவதற்கு அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் ஆய்வகங்களை நிறுவவும், அனைத்து அரசுப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளை அமைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் வரவு செலவு திட்ட அறிக்கைகளில் 20,000 திறன் வகுப்பறைகள் ரூ.400 கோடி செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பின்படி, அனைத்து அரசு மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தொகுதியான இராதாபுரம் தொகுதியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பிற நிதியிலிருந்து 6 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள 303 திறன் வகுப்பறைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

திறன் வகுப்பறை அமைக்கப்பட்டுள்ள அனைத்து பள்ளிகளிலும், வெப் கேமரா வசதியும், தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான UPS வசதியும் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

மேலும், இந்த வகுப்பறைகள் அனைத்தும் கம்ப்யூட்டர் சர்வர் மூலமாக மாவட்டக் கல்வி அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், ஒரு இடத்தில் இருந்து கல்வி வல்லுநர்கள், பயிற்சி வகுப்புகளை நடத்தினால் திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ள அனைத்து பள்ளிகளின் மாணவ, மாணவியர்களும் கற்க இயலும்.

**கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குதல்!**

பள்ளிக்கல்வித் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 61 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 4 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ஜி. அறிவொளி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. கா.ப. கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ். ஆர். ஜெகதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மணிப்பூர் விவகாரம்: எதிர்க்கட்சிகள் கடும் அமளி

# நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பு!

*புதுடெல்லி, ஆக. 2 -*

*மணிப்பூர் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டுமென மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கியது முதல் கடந்த ஒரு வாரமாக எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருவதால் அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.*

*இந்நிலையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு மீண்டும் கூடியது. மழைக்கால கூட்டத் தொடரின் 8வது நாளான நேற்று முன்தினம் அவை கூடிய உடன் மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டுமென கோரிக்கை வைத்து எதிர்க்கட்சிகள் கோஷம் எழுப்பின. இதனால், அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.*

*இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவை மாலை 3.30 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்தார்.*

*அதேபோல், மாநிலங்களவை மாலை 3.30 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டு பின்னர் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டன என சபாநாயகர் ஜெகதீப் தங்கார் தெரிவித்தார்.*




நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் காட்பாடி வி.ஐ.டி. பல்கலை வளாகத்தில் நேற்று முன்தினம் (31.07.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் 7–வது ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் – 2023 போட்டிக்கான கோப்பையை அறிமுகப்படுத்தி பாஸ் தி பால் ட்ராப்பியை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், திருமதி அமுலு விஜயன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், ஹாக்கி யூனிட் ஆஃப் தமிழ்நாடு தலைவர் சேகர் ஜெ.மனோகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.